

**Thank you**

**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 97** | **நாள்: 27.04.2022**

# என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!**

கடந்த 6 ஆண்டுகளில் இறைவன் எத்தனையோ வழிகளில்
நம்மை வழிநடத்தி வந்திருக்கிறார்.
அதற்கு நெஞ்சம் நிறைந்து நன்றி சொல்லும் காலமிது.

எத்தனையோ நற்காரியங்களை அற்புதமாக நமக்கும் நம் சபைக்கும்
இறைவன் செய்திருக்கிறார். மனமகிழ்வோடு நன்றி சொல்வோம்.

நம் சபையின் தனிவரத்தை வாழ்வாக்க நல்மனமும், ஆற்றலும்,
வளங்களும் பொழிந்திருக்கிறார். அவரது பெரும் கருணைக்காய் நன்றி சொல்வோம்.

நம் தகுதிக்கும் வலிமைக்கும் மேலாகவே நம்மை
ஆசீர்வதித்த கிருபைக்காய் நன்றி சொல்வோம்.

கடந்த 21-வது பொதுப்பேரவை காலத்தில்
நம்மோடு இருந்தவர்கள் இன்று நம்மோடு இல்லை.
மீண்டும் கடவுள் நமக்குப் போனஸ் ஆக வாழ்வைக் கொடுத்துப்
பேரவையை சந்திக்கும் வாய்ப்பையும் கொடுத்திருக்கிறார்.
நெஞ்சம் நிறைந்து வாழ்வுக்காக அவருக்கு நன்றி சொல்வோம்.

ஆபத்துக்கள், விபத்துக்கள், இன்னல்கள் இக்கட்டுகளிலிருந்து
நம்மையும் சபையையும் பாதுகாத்திருக்கிறார்.
அவரது பராமரிப்பிற்காய் நன்றி சொல்வோம்.

இப்படி எண்ணிப்பார்க்க இயலாத எண்ண எண்ண நீண்டுகொண்டேயிருக்கும்
பல்வேறு காரியங்களுக்காய் மகிழ்வோடு நன்றி சொல்வோம்.

நமக்கு தாயாகவும் வழிகாட்டியாகவும் துணையாகவும் நின்று
நம்மைத் தம் போர்வைக்குள் வைத்துக் காத்துக்கொண்ட
நம் அடைக்கலத் தாய்க்காய் நன்றி சொல்வோம்.

இந்த நன்றியில் நனைந்து இந்த உயிர்ப்புக் காலத்தில்
இறைவனுக்கும் அடைக்கலத்தாய்க்கும் நம் நன்றி மலர்களை காணிக்கையாக்குவோம்.

# 22 வது பொதுப்பேரவை தொடங்குகிறது



இஸ்ராயேல் மக்களின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் எக்காளம் முழங்க இசைக்கருவிகள் மீட்ட தொடங்கப்பட்டன.

நமது 22-வது பொதுப்பேரவையும் நமது சபையின் மிகச் சிறப்பான நிகழ்வாகும்.

**ஆண்டவருக்கு நன்றி செலுத்தி நம் 22-வது பொதுப்பேரவையைத் தொடங்குகிறோம் என்று அடைக்கல அன்னை வழி நின்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.**

வரும் மே மாதம் 01 ஆம் நாள் காலை 8.00 மணிக்கு Registration உடன் பேரவை நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து 9.30 மணிக்கு சென்னை மயிலை உயர் மறைமாவட்டப் பேராயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி பேரவைக்கு இறையருளைப் பெற்றுத் தருகிறார்.

**சரியாக காலை 11 மணிக்கு நம் சபைத் தலைமை அன்னை பாஸ்கா திரியை ஏற்றி வைத்து நமது 22-வது பொதுப்பேரவையைத் தொடங்கி வைக்கிறார்.**

தொடர்ந்து மே 03 வரை பேரவையின் நிகழ்வுகள் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை சபை முழுமைக்கும் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

**பேரவைக்கு அனைத்து சகோதரிகளின் பங்களிப்பு:**

- மே 01 ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு அனைத்து இல்லங்களிலும் நற்கருணை ஆண்டவரைப் பிரசன்னப்படுத்தி **திருப்பாடல்கள் 148,150** ஆகியவற்றை அனைவரும் இணைந்து செபித்து பேரவைக்கு இறையருள் கிடைக்க செபியுங்கள்.
- மனமொருமித்த இறைப்புகழ்ச்சி மட்டுமே இறைவனின் ஆசீரைக் கொண்டு வரும் வல்லமை கொண்டது. அனைத்து மாட்சிக்கும் புகழுக்கும் தகுதியானவா் அவா் ஒருவரே. நம்மையும் சபையையும் வந்து சேரும் அனைத்து புகழ்ச்சியும் அவருக்கே உரித்தானது. இத்தகைய மனநிலையோடு இறைப்புகழ்ச்சித் திருப்பாடல்களைச் செபிப்போம்.
- பேரவையின் இரண்டாம், மூன்றாம் நாளிலும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை இல்லத்தின் அனைத்து சகோதரிகளும் நற்கருணை ஆண்டவா் முன் கூடியிருந்து சபைக்காக செபிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.
- இந்த மூன்று நாட்களும் அலுவல் தவிர வேறு தனிப்பட்ட காரியங்களுக்காய் வெளியில் செல்வதைத் தவிா்ப்போம்.
- முடிந்த அளவு அனைத்து சகோதரிகளும் மௌனத்திலும் செபத்திலும் இந்த நாளைச் செலவிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பேரவை உறுப்பினர்கள் கவனத்திற்கு:</u>**

- பேரவை உறுப்பினர்கள் **காலை 7 மணிக்கே** மயிலை இல்லத்தில் இருப்பது விரும்பப்படுகிறது.
- காலை உணவு முடிந்த பின் Registration –க்குத் தயாராகிவிடுங்கள்.
- பேரவை வளாகத்திற்குள் அவசியமின்றி அலைபேசி பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.
- கடந்த சுற்றுமடலில் குறிப்பிட்ட Mobile எண்ணை 6374919617 பள்ளி / பணித்தளத்தில் கொடுத்து வையுங்கள். மிக அவசிய காரணங்களுக்காக மட்டும் அழைக்க வேண்டும் என அறிவுறுத்துங்கள்.

**நம்மைச் சுற்றிலும் நம் வளாகம் முழுமையும் இறையாசீர்**
**அலைஅதிர்வுகள் இருக்கும்படிக் கவனமாய் இருப்போம்.**

**உங்கள் ஒவ்வொருவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் பேரன்பும், பேராற்றலும், பெருமகிழ்வும் நிறைவாகக் கிடைக்க அன்போடு வாழ்த்துகிறேன்! இறையாசீர் பெருக செபிக்கிறேன்!**

அக ஒளியின் பாதையில்

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை